
ISSN 2454-3993
▪ மலர் 3 ▪ சிறப்பிதழ் 4 ▪ மார்ச், 2019

# சான்லாக்ஸ் பன்னாட்டுத் தமிழியல் ஆய்விதழ்



பதிப்பாசிரியர்கள்
திருமதி. மு. கவிதா
முனைவர் ஆ. ஜோஸ்பின் செலின் மேரி

தொகுதி - 2

புனித அந்தோனியார் பெண்கள் கலை மற்றும் அறிவியல் கல்லூரி

மற்றும்

சான்லாக்ஸ் பன்னாட்டுத் தமிழியல் ஆய்விதழ்

இணைந்து நடத்தும்

பன்னாட்டுக் கருத்தரங்கம்

## "பன்நோக்குப் பார்வையில் இலக்கண இலக்கியங்கள்"

தமிழ்த்துறை
புனித அந்தோனியார் பெண்கள் கலை மற்றும் அறிவியல் கல்லூரி,
அமல அன்னை நகர், தாமரைப்பாடி,
திண்டுக்கல் - 624 005.

UGC Approved Journal Number: 40729
VOLUME 3 | SPECIAL ISSUE 4 | MARCH 2019
Shanlax International Journal of Tamil Studies
(A Peer-reviewed - Scholarly Indexed Quarterly Journal)
SHANLAX INTERNATIONAL JOURNALS
editorsij@shanlaxjournals.in | www.shanlaxjournals.in

## "பன்நோக்குப் பார்வையில் இலக்கண இலக்கியங்கள்"

(பன்னாட்டுக் கருத்தரங்கம்)


| | | |
|---|---|---|
| பதிப்புரிமை | : | பதிப்பாசிரியர்கள் |
| முதற்பதிப்பு | : | மார்ச், 2019 |
| வெளியீடு | : | தமிழ்த்துறை,<br>புனித அந்தோணியார் பெண்கள் கலை மற்றும் அறிவியல் கல்லூரி,<br>தாமரைப்பாடி, திண்டுக்கல் - 624 005. |
| கணினி அச்சாக்கம் | : | சான்லாக்ஸ் பிரஸ் |
| பக்கங்கள் | : | 270 |

**ISSN: 2454 - 3993 (UGC Approval Number: 40729)**


பன்னாட்டுக் கருத்தரங்கம் **"பன்நோக்குப் பார்வையில் இலக்கண இலக்கியங்கள்"**

# இலக்கியங்களில் பெண்ணியம்

**பொ. சுபாலெட்சுமி**
உதவிப் பேராசிரியர், புனித அந்தோணியார் பெண்கள்
கலை மற்றும் அறிவியல் கல்லூரி, தாமரைப்பாடி

## முன்னுரை

சங்க காலத்தில் பெண்கள் அறத்திலும் வீரத்திலும் சிறந்தவர்களாக விளங்கினர். தம் மக்கள் வீரப்புகழ் பெற்று வாழ வேண்டும் என்று ஆசைப்பட்டவர்கள். அக்கால மகளிர் தன் மகனின் வீரத்தைக் கண்டு பெருமிதம் கொள்பவராகவும். கல்வி கேள்விகளில் சிறந்தவர்களாகவும் கற்றுத் திறம் மிக்கவர்களாகவும் அரசியல் அறிவு பெற்றவர்களாகவும் வாழ்ந்த செய்தியினைப் சங்க கால இலக்கியத்தின் வழி ஆய்வது ஆய்வின் நோக்கமாகும்.

**மலர்:** 3
**சிறப்பிதழ்:** 4
**மாதம்:** மார்ச்
**வருடம்:** 2019
**ISSN:** 2454-3993

## சங்க கால மகளிரும் சங்கப் புலவர்களும்

சங்க காலத்தில் இல்லறத்தோடு நாட்டிற்குரிய நல்லறத்தையும் தம் தனித் திறமையையும் பெண்கள் வெளிக் காண்பித்தார்கள். அவர்கள் கல்விச் செல்வம் பெற்றவர்களாகவும் செய்யுள் இயற்றும் திறமை கொண்டவர்களாகவும் இருந்தனர். அவர்களுள் ஔவையார், காக்கைப்பாடினியார், ஒக்கூர் மாசத்தியார், நக்கண்ணையார், வெள்ளிவீதியார், வெண்ணிக் குயத்தியார் உள்ளிட்ட முப்பது பெண்பாற் புலவர்கள் 154 செய்யுட்களைச் சங்க இலக்கியங்களில் பதிவு செய்து இருக்கின்றனர். முக்கியமாகப் புறநானூற்றுப் பாடலில் மகளிரின் வீரம் சிறப்பாகப் பேசப்படுகிறது.

## பெண்ணின் பொதுப் பண்புகள்

**"அச்சமும் நாணும் மடனும் முந்துறுதல்**
**நிச்சமும் பெண்பாற்கு உரியஎன்ப என்றும்**
**செறிவும் நிறைவும் செம்மையும் செப்பும்**
**அறிவும் அருமையும் பெண்பாலன"**

இத்தகைய குணநலன்களை எடுத்துரைக்கின்றது தொல்காப்பியம். பெண்களின் பண்பு நலன்களைப் பாடாத புலவர்களும் இல்லை படைப்புகளும் படைப்பாளர்களும் இல்லை என்றே கூறலாம். பெண்கள் உயிரை விட நாணத்தையும் நாணத்தை விடக் கற்பையும் உயர்வாகக் கருதி இருந்தனர் மேலும் கற்பு. காமம். நல்லொழுக்கம், பொறை, நிறை. விருந்து, புறந்தருதல். சுற்றம் ஓம்பல் ஆகியவற்றையும் பெண்களின் பண்புகளாகக் கூறுகின்றார்.

## சங்க இலக்கியங்களில் பெண்ணியம்

சங்க கால மகளிர் வீரத்தை இரு கண்கள் போலவும் அணிகலன்கள் போலவும் பாதுகாத்து வளர்த்து வந்தார்கள் என் இலக்கியங்கள் சித்திரிக்கின்றன. பொதுவாக வீரம் என்பது கல்வி, அஞ்சாமை, ஈகை, கொடை, மானம் ஆகிய பண்புகளைக் குறிக்கும். இத்ததைய பண்பு நலன்களை ஆண்களுக்கு உரித்தது என்று இல்லாமல் பெண்களும் சங்க காலத்தில் பெற்று இருந்தனர். சான்றாக முதல் நாளில் தாய் தன் கணவனை

இழக்கின்றாள். அடுத்த நாள் தமையனை இழக்கின்றாள். மூன்றாம் நாள் போருக்குத் தன்னுடைய ஒரே மகனை போருடை உடுத்தி வாளைக் கையில் கொடுத்து அனுப்புகிறாள் (புறம் 279). இத்தகைய வீரம் மிக்க தாய்மார்கள் சங்க காலத்தில் இத்தகைய பண்புநலன்களோடு வாழ்ந்தார்கள் இது மட்டு மல்லாமல் இரக்கம் மிக்கவர்களாகவும் மானத்தோடும் வாழ்ந்தார்கள்.

**சங்க காலத் தாயார்**

தாயார் ஒரு தன்மையரே எனினும் அகம்புறம் எனப் பொருட் பாகுபாடு பற்றிச் சங்க நூல்கள் விளக்குகின்றன. தாயாரை புறத்திணைத்தாயார், அகத்திணைத்தாயார் என இரு வகைப்படுத்துகின்றனர். புறத்திணைத்தாயார் மகன் மேல் கொண்ட பற்றினால் அவனை வீரனாகவும் சான்றோனாகவும் ஒழுக்க மேம்பாடு உடையனவாகவும் உருவாக்குபவள்ளனர். இதனை

**"ஒரும்**
**புலி சேர்ந்து போகிய கல் அளை போல**
**ஈன்ற வயிறோ இதுவே**
**தோன்றுவன் மாதோ போர்களத்தானே"**

(புறம்.86)

என்ற பாடல் காட்டுகிறது. ஒரு போர் வீரனைப் பெற்ற வயிறு இது தான் என்று தாய் பெருமை பொங்கக் கூறும் பாடலாக இது காணப்படுகிறது புறத்திணைத் தாயாரை 'நற்றாய்' என்றே கூறலாம் ஆகத்திணைத்தாயார் மகளை இல்லற நெறிக்கண் செலுத்துவதில் கண்ணும் கருத்துமாக இருந்து கடமையாற்றுகின்றனர். ஒழுக்க மேம்பாடும் குடிப்பெருமையும் பெண்களின் கற்பொழுக்கத்தால் வருவன. எனவே பெண்ணை ஒழுக்க நெறியுடன் கட்டுப்பாட்டுடன் வளர்ப்பது தாயின் கடமை என்பதை அகநானூற்றுத் தலைவி ஒருத்தி

**"அன்னை அறியின் இவணுறை வாழ்க்கை**
**எனக் கெளிதாகல் அல்"**

எனப் புலம்புகிறாள்.

அகத்திணையில் நற்றாய் என்ற தாயாரை தொல்காப்பியம் குறிப்பிடுகின்றது. வளர்ப்புத் தாயார், "செவிலியர்" என்றும் இலக்கியங்களில் குறிப்பிடப்படுகின்றனர்.

**தலைவியின் மனநிலை**

வினை மேற் சென்ற தலைவனையே உயிராய் எண்ணி வாழ்பவர்கள் தாம் தமிழ்ப் பெண்கள் அவர்கள் பிரிந்து சென்ற தலைவனை நினைத்து தங்களை ஒப்பனை செய்து கொள்ளாது உடல் மெலிந்து வருத்தத்துடன் காணப்படுவர்

அவ்வாறே நெடுநல்வாடையிலும் மன்னனைப் பிரிந்த பாண்டிமா தேவியும் பாசறையில் தங்கியிருந்த அரசனை நினைத்து வருத்தத்துடன் காத்திருந்தால்

**"பொலந்தொடி நின்ற மயிர் வார்முன்கை**
**வலம்புரி வளையொடு கடிகை நூல் யாத்து**
**புனையா ஓவியம் கடுப்ப"**

மன்னனைப் பிரிந்த அரசி அணிகலன்களால் அலங்காரம் செய்யப்பட்ட தன்னுடைய கைகளில் இன்று வலம்புரிச் சங்கினால் அறுத்துச் செய்யப்பட்ட வளையல்கள் மட்டுமே அணிந்து காப்பு நாண் கட்டியிருந்தாள். அவ்வாறு துயிருற்று இருந்த அரசமாதேவியைத் தோழியரும் செவிலியரும் ஆற்றுவித்தனர்.

**"குறியவும் நெடியவும் உரைபல பயிற்றி**
**இன்னே வருகுவர் இன் துணையோர் என**
**உகந்தவை மொழியவும் ஒள்வாள் மிகக் கலுழ்ந்து"**

என்று கூறுகிறார் புலவர் அரசமாதேவியின் பரிவாற்றாமை மிகுவது கண்டு அரசியை ஆற்றுவிப்பதற்காக தோழியரும் செவிலியரும் சில ஆறுதல் மொழிகளைக் கூறினர்.

**மதம் கொண்ட யானை இசையில் மயங்குதல்**

அகநானூறு 102 ஆம் பாடலில் குறிஞ்சி நிலத்துப் பெண் குறிஞ்சிப்பண் பாடியதால் தினைப் புனத்தை அழிக்க வந்த யானை இசையில் மயங்கி உறங்கியதாக உணர்த்தப் பெற்றுள்ளது.

**"உளைமான் துப்பின் ஓங்குதினைப் பெரும் புனத்துக்**
**கழுதில் கானவன் பிழி மகிழ்ந்து வதிந்தென**
**உரைத்த சந்திரன் ஊரல் இருங்கதுப்பு**
**ஐதுவரல் அசைவளி ஆற்ற கைபெயரா**
**ஒலியியல் வார்மயிர் உளரினள் கொடிச்சி**
**பெருவரை மருங்கில் குறிஞ்சி பாட**
**குரலும் கொள்ளால் நிலையினும் பெயராது**
**படாஅப் பைங்கண் பாடுபெற்று ஒய்யென**
**மறம்புகல் மழகளிறு உறங்கும் நாடன்"** (அகம். 102)

ஆண்கள் மட்டுமல்லாமல் பெண்களும் பண் அமைத்து பாடுவதில் இசைக் கருவிகளை மீட்டுவதிலும் வல்லவராய்த் திகழ்ந்துள்ளனர் என்பதை இப்பாடல் உணர்த்துகிறது.

**சங்க இலக்கியத்தில் கைம்பெண் நிலை**

கணவனை இழந்தவள் 'கைம்பெண்' என்று அழைக்கப்படுகின்றாள். கைம்பெண் தவ வாழ்க்கையை மேற்கொள்ள வேண்டும். அது இழிதக்க வாழ்க்கை ஏனெனில் ஒரு பெண்ணுக்குக் கணவனுடன் வாழும் நாளே பயனுடைய முழுமையான வாழ் நாளாம். ஆதலால் கணவனை இழந்தவர்களைக் கைம்பெண் என்று அழைத்தனர். தற்காலத்தில் "விதவை" என்ற பெயரில் அழைக்கப்படுகின்றனர்.

அழகைச் சிதைக்கும் நோக்கத்திலேயே கைம்மை நோன்பு கடைபிடிக்கப்படுகிறது. கணவனை உயிராக நினைத்த பெண்கள் தன் கணவன் இறந்தவுடன் கைமைச்சடங்காக மொட்டையடித்தல், முடிக்களைதல் நிகழ்ச்சியை நடத்தியுள்ளனர்.இதை

**"ஒள் நுதல் மகளிர் கைம்மை கூர,**
**அவிர் அறம் கடுக்கும் அம்மென்**
**குவை இருங் கூந்தல் கொய்தல் கண்டே"** (புறம். 25)
**"கொய்ம் மழித் தலையொடு கைம்மை யுறக் கலங்கிய**
**கழி கல மகடு உய் போலப்**
**புல்லையென்றனையால் பல் அணி இழந்தே"** (புறம். 26)
**மண்ணுறு மழித் தலைத் தென் நீர்வார்"** (புறம். 280)

என்ற பாடல் வரிகளால் அறியலாம்,சில சமூகங்களில் கணவனை இழந்த கைம் பெண்கள் "மொட்டையடித்தல்" சடங்கினை இன்றளவும் நடைமுறையில் கொண்டுள்ளனர். ஏனெனில் கணவனை இழந்த பெண்கள் பிற ஆடவரிடமிருந்து தங்களைப் பாதுகாத்துக் கொள்ள இதை மேற்கொள்கின்றனர்.

**கல்வியின் மேன்மை**

சங்க இலக்கியத்தில் புலமை ஞானம் மிக்க பெண்களைக் கல்வி மகளிர் என்றனர். சங்க காலத்தில் ஐம்பதிற்கும் மேற்பட்ட பெண்பாற் புலவர்கள் சிறப்பு பெற்று விளங்கினர். சங்க கால மகளிர் கற்கும் வாய்ப்பைப் பெற்றிருந்ததனால் அறியாமை இருளை அகற்றி அறிவொளி வழங்கும் கல்வியால் பண்பாடு மிக்கவர்களாய் அச்சம், மடம், நாணம், பயிர்ப்பு எனும் நற்குணங்களைக் கொண்டவர்களாய் கல்வியை மதித்து வாழ்ந்தார்கள் என்பதை,

**"உற்றுழி உதவியும் உறுபொருள் கொடுத்தும்**
**பிற்றை நிலை முனியாது கற்றல் நன்றே!**
**பிறப்புஓர் அன்ன உடன்வயிற்று உள்ளும்**
**சிறப்பின் பாலால் தாயும் மனம் திரியும்** (புறம். 183)

என்ற புறநானூற்றுப் பாடல் வரிகளுக்கு ஏற்ப ஒரு தாய் வயிற்றில் பிறந்த பல பிள்ளைகளுள் கல்விச் சிறப்பால் உயர்ந்தவளைத் தாய் மனம் விரும்பும் என்றும், கல்லாத பிள்ளையை எண்ணித் தாயுள்ளம் கூட வேறுபடக் கூடும் என்பதை அக்கால மகளிர் தாம் கல்வியின் சிறப்பினை

உணர்ந்ததோடு மட்டுமல்லாமல் தனக்கும் பிறருக்கும் குழந்தைகளும் கல்வித் செல்வம் பெற்றவர்களாக இருக்க வேண்டும் என்ற உயர்ந்த எண்ணம் கொண்டவர்களாக வாழ்ந்ததமையை அறிய முடிகிறது.

**முடிவுரை**

**வீட்டுக்குள்ளே பெண்ணைப் பூட்டி வைப்போம்**
**என்ற விந்தை மனிதர் தலை கவிழ்ந்தார்**

என்ற பாரதியின் பாடல் வரிக்கேற்ப இன்று பெண்கள் தன் சக்தியையும், திறமையையும், ஆற்றலையும், ஆக்கத்தையும் வெளிக்கொணர முக்கியக் காரணம் தகவல் தொடர்பு சாதனங்களும் இன்றைய இலக்கியப்படைப்புகளுமே ஆகும்.